**தலைப்பு – 112 வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியில் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 24 ஆந் திகதி அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்று மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 10,063 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 9,769 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சின் தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 294 மில்லியன் அல்லது மொத்த தேறிய ஏற்பாட்டில் 3 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 8,827 | 8,813 | 14 | 0.16 |
| மூலதனம் | 1,236 | 956 | 280 | 23.00 |
| **மொத்தம்** | **10,063** | **9,769** | **294** | **3.00** |

### 2.2 முற்பணக் கணக்குகள்

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 11201 | 33 | 22 | 20 | 23 | 130 | 93 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 746 மில்லியன் கூட்டுத்தொகையாக காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| கட்டுநிதிக் கணக்குகளின் இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 7002/0000/000/0035/0008/000 | 61 |
| 7002/0000/000/0035/0009/000 | 27 |
| 7002/0000/000/0035/0010/000 | 649 |
| 7002/0000/000/0035/0011/000 | (480) |
| 7002/0000/000/0035/0012/000 | 87 |
| 7002/0000/000/0035/0013/000 | 31 |
| 7002/0000/000/0035/0014/000 | 370 |
| **மொத்தம்** | **746** |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,186 மில்லியனாகும். விபரம் பின்வருமாறாகும்.

| வைப்புக் கணக்குகளின் இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0006/0071/000 | 32 |
| 6000/0000/00/0015/0025/000 | 1,154 |
| **மொத்தம்** | **1,186** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புக்கள் 3.1 முதல் 3.16 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. தலைப்பு 112 – வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

## 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்து பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை (வாகனங்கள் தவிர) |
| கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| பிணைப்பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை |
| நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |

## 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சினால் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட 09 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய வருடங்களில் வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காததுடன், அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களில் பெறுமதி ரூபா 106,112,313 ஆகும்.

## 3.3 ஒதுக்கீட்டு கணக்கு

### பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,125,700 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

(ஆ) 03 செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால், நிதியேற்பாட்டில் பயன்பாட்டின் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 65 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்செல்லையினை கொண்டிருந்தது.

(இ) 2013 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 5(2) ஆம் பிரிவிற்கு முரணாக தலைப்பின் ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மூலதன நிதி ஏற்பாட்டில் எஞ்சிய ரூபா 707,500 நிதியேற்பாடு மற்றைய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதன ஒதுக்கீட்டிற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 3.4 கட்டுநிதிக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிராத 07 கட்டுநிதி கணக்குகளுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 739,446,730 ஆகக் காணப்பட்டது.

(ஆ) அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளின் மீதிகள், அத்திகதியில் தீர்க்கப்படாத முற்பண மீதி மற்றும் வெளிநாட்டு தூதரகங்களின் பண மீதி உள்ளடங்கலாக ரூபா 75,018,218 தொகையான இணங்காமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் வருமாறு,

| | | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| அமைச்சின் கணக்குகளில் காணப்படும் கட்டுநிதி மீதி | | 745,575,420 |
| தீர்க்கப்படாத முற்பணங்கள் | 364,906,835 | |
| தூதரகங்களின் இறுதி காசு மீதி | 305,650,367 | |
| அமைச்சில் இருக்க வேண்டிய கட்டுநிதி மீதி | | 670,557,202 |
| வேறுபாடு | | 75,018,218 |

(இ) ஒதுக்கீட்டு கணக்கின் குறிப்பு (iii) கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கையின் தீர்க்கப்படாத உப கட்டுநிதி (முற்பணங்கள்) கூட்டுத்தொகையின் கீழ் எதுவித பெறுமதியும் காட்டப்பட்டிருக்கவில்லை யெனினும், அமைச்சின் (தூதரகங்கள் உள்ளடங்கலாக) தீர்க்கப்படாத முற்பணங்கள் ரூபா 364,906,835 மற்றும் தூதரகத்தின் இறுதி காசு மீதி ரூபா 305,650,367 என ரூபா 670,557,202 கூட்டுத்தொகை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சினதும் வெளிநாட்டு தூதரகங்களினதும் தீர்க்கப்படாத முற்பணங்களின் மீதி ரூபா 364,906,835 ஆகும். விபரம் பின்வருமாறு.

| விபரம் | பெறுமதி | காலப்பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|
| | | 01 – 03 வருடங்களுக்கு இடைப்பட்ட | 04 – 06 வருடங்களுக்கு இடைப்பட்ட | 06 வருடங்களுக்கு மேற்பட்ட |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | 5,147,944 | 38,171 | 309,773 | 4,800,000 |
| வெளிநாட்டு | 359,758,891 | | | |
| தூதரக அலுவலகம் | | | | |
| வெளிநாட்டு தூதரகங்களின் செலவினப் பகுப்பாய்வு பின்வருமாறு | | | | |
| தீர்க்கப்படாத போக்குவரத்து செலவின முற்பணங்கள் | 4,820,027 | 3,232,888 | 1,049,867 | 537,292 |
| ஓய்வூதியம் | 12,387,247 | -- | 12,387,247 | -- |
| வங்கி பிணை பொறுப்பு | 20,061,453 | 14,006,886 | 3,623,054 | 2,431,513 |
| சம்பள முற்பணம் | 398,969 | 75,790 | 172,831 | 150,348 |
| பாதுகாக்கப்பட்ட பிணை | 208,106,609 | 107,574,169 | 47,509,030 | 53,023,410 |
| இனங்காணப்படாத வைப்புக்கள் | 113,984,566 | 44,036,263 | 34,793,292 | 35,155,011 |

அமைச்சின் முற்பண மீதியினுள் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்ட ரூபா 309,773 மீதியொன்று காணப்பட்டதுடன், இது 05 வருடங்களை கடந்திருந்தும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டினுள் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநட்டின் பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 448,000,000 தொகை ஆண்டின் இறுதியிலும் தீர்க்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 1,153,581,743 ஆக இருந்ததுடன், தனிப்பட்ட மீதிகளின் பிரகாரம் மீதி ரூபா 1,161,011,502 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் வேறுபாடு ரூபா 7,429,759 ஆகும்.

## 3.6 அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

விடய இலக்கம் 11201 கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,221,212 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

## 3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.7.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 வருடாந்த கொள்வனவு திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவு திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2014 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்ட அமர்வுகள் 02 தடவைகள் நடாத்தப்பட்டிருந்தது.

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்பாடற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) ஒழுங்கமைப்பு பிரிவுக்கு அவசியமான கடமையொன்றென குறிப்பிட்டு 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 50,840 செலுத்தி 16 செல்லிடத் தொலைபேசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. குறித்த நடவடிக்கையின் பின்னர் அந்த செல்லிடத் தொலைபேசிகள் களஞ்சியத்திற்கு மீளக் கையளிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு பரீசோதனை தினமாகிய 2014 செம்தம்பர் 10 ஆந் திகதி வரையிலும் அந்த தொலைபேசிகள் செயற்பாடற்று எதுவித பாவனைக்கும் எடுக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(2) அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரிலுள்ள தூதரகத்திற்குரிய அவுஸ்திரேலிய டொலர் 2,589,000 (A$) பெறுமதியுடைய 02 கட்டிடங்கள் 1 - 6 வருடங்கள் வரையான காலம் செயற்பாடற்று காணப்பட்டன.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

-----------------------------------------------------------------------------------------

2014 ஒத்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சு 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கையினை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

--------------------------------------------------

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 662,056,694 ஆக இருந்ததுடன், கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் பதிவேட்டில் காலப் பகுதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 இணங்காமைகள்**

-----------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

-------------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | பெறுமதி<br>------------<br>ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------------------------ | | |
| (i) நிதிப் பிரமாணம் 751 | 746,422 | கொள்வனவு செய்யப்பட்டிருந்த டோனர்கள் உரிய இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 754 | 1,688,273 | (i) 2013 ஆம் ஆண்டின் இறுதி டோனர் இருப்பு மீதி 2014 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாக புதிய இருப்புப் பதிவேட்டில் கொள்ளும் போது சில இருப்பு மீதிகள் குறைவாக காட்டப்பட்டிருந்தன. அவ்வாறு குறைவாக காட்டப்பட்டிருந்த இருப்பின் பெறுமதி ரூபா 1,688,273 ஆகும். |
| | 861,535 | (ii) 2013 ஆம் ஆண்டின் இறுதியிலான டோனர் இருப்பு மீதிகள் 2014 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாக முன் |

கொண்டு செல்லப்பட்டுள்ளதா எனப் பார்க்கும் போது ரூபா 861,535 பெறுமதியான டோனர் இருப்பொன்று 2014 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மீதியாக முன் கொண்டு செல்லப்படுவதாக இருப்புப் புத்தகப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், உரிய இருப்பு புத்தக பதிவேட்டினை பரீசீலனை செய்யும் போது, அவ்வாறானதொரு ஆரம்ப மீதியொன்றாக 2014 ஆம் ஆண்டின் டோனர் இருப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அரச நிருவாகச் சுற்றறிக்கை**

---

| | | | |
|---|---|---|---|
| (i) | 1999 பெப்ரவரி 29 ஆந் திகதிய 02/90 இலக்க சுற்றறிக்கை | | வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் வெளிநாட்டு உத்தியோகத்தர்களுக்கு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி செல்லிடத் தொலைபேசிகள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் 08 செல்லிடத் தொலைபேசிகள் இருப்பு பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1990 மே 18 ஆந் திகதிய 26/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 341,627 | விழா நடவடிக்கைகளின் போது மதுபானத்தால் உபசரிக்கப்படகூடாதெனினும், இந்த விதியானது கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், |

| | | |
|---|---|---|
| | | மேற்குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சினால் மதுபான உபசாரத்திற்காக ரூபா 341,627 செலவிடப்பட்டிருந்தது. |

**(இ) திறைச்சேரி சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| 2003 மார்ச் 28 ஆந் திகதிய MF/TR/1/2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | 40,000 முதல் 90,000 வரை | அமைச்சினால் சுற்றறிக்கைக்கு முரணாக 2014 ஒக்தோபர் மாதம் வரையிலும் வாடகை அடிப்படையில் 14 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |

**(ஈ) அமைச்சின் சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| (i) அமைச்சின் மதியுரை கோவை 166 | 5,126,638 | விமான பயணச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது அமைச்சின் முன் அங்கீகாரம் மற்றும் நிதி ஏற்பாடுகள் என்பன பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும், 06 தூதரகங்களுக்கு செலுத்தப்பட்ட விமானப் பயணச் சீட்டுகளுக்காக அவ்வாறானதொரு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2001 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 178 ஆம் இலக்க அமைச்சின் மதியுரை கோவை | 12,649,723 | தூதரகங்களால் விமானப் பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யும் போது இலங்கைக்கு வருவதற்கான மிகவும் எளிதான மற்றும் இலாபமுடைய வழியில் பயணிப்பதற்காக கேள்வி மனுக்கள் கோரப்பட்டு உரிய சேவை வழங்குனர் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், 08 தூதரகங்களால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள விமான பிரயாணச் சீட்டுக்களுக்காக விலை மனுக்கள் கோரப்பட்டமைக்கான தகவல்கள் |

வெளிப்படுத்தப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2009 செப்தம்பர் 28 ஆந் திகதிய 261 ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2009 செப்தம்பர் 04 ஆந் திகதிய FA/OMA/E4/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | 146,503 | யான்குன் தூதரகத்தின் மூன்று உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மாத்திரம் ஐக்கிய இராச்சியத்தின் டொலர்களுக்கு மாற்றப்பட்டு செலுத்தப்பட வேண்டுமெனினும், சம்பளத்துடன் செலுத்தப்பட்டிருந்த 15 சதவீத படிகளும் ஐக்கிய இராச்சியத்தின் டொலர்களுக்கு மாற்றப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது |

**3.10 வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகளில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ) காலாவதியான காசோலைகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் வங்கிக் கணக்கிலிருந்து வழங்கப்பட்டதெனினும் வங்கிக்கு சமர்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த ரூபா 888,390 பெறுமதியான 11 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396 (ஈ) பிரகாரம் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 09 தூதரகங்களுக்குரிய 12 வங்கிக் கணக்குகளில் ஆறு மாதங்களைக் கடந்த காலாவதியான காசோலைகள் தொடர்பில் மேற்குறித்த நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத மீதிகள்**

09 தூதரகங்களினால் 12 வங்கிக் கணக்குகளுக்குரிய 2014 திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்ததெனினும், அதன் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இணக்கமின்மைகள் தொடர்பில் அவசியமான நடவடிக்கை எடுக்காமையினால் வங்கிக் கணக்கிணக்க கூற்றினை தயாரிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடு இடம்பெற்றிருக்கவில்லை.

**(இ) வங்கி வரவு வைத்தல்கள்**

09 தூதரக அலுவலகங்களின் 11 வங்கிக் கணக்குகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் மற்றும் 09 தூதரகங்களின் அலுவலகங்களின் 18 வங்கிக் கணக்குகளுக்கான நேரடி பெறுவனவுகளை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

03 தூதரக அலுவலகங்களின் 03 வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதியினை உறுதிப்படுத்தும் பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வொஷிங்டன் தூதுவர் அலுவலகம்**

2014 திசெம்பர் மாதத்திற்கென தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றில் 2006 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட தீர்வையாகாத ஐ.அ. டொலர் 1,035 பெறுமதியான வைப்புக்கள் மற்றும் இனங்காணப்படாத கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 20,212 காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் இனங்காணப்படாத வைப்புக்கள் ஐ.அ.டொலர் 2,583 ஆன மீதியொன்றிற்கான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) லொஸ்ஏன்ஜல்ஸ் கொன்சியூலர் ஆணையாளர் அலுவலகம்**

2011 ஒக்தோபர் 03 ஆந் திகதி களவாடப்பட்ட ஐ.அ.டொலர் 1,583 தொகை தொடர்பில் நட்ட இழப்பாக கருதி நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் வங்கி இணக்கக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(எ) பிரேசில் தூதுவர் அலுவலகம்**

BRL கணக்கிற்கான வங்கிக் கணக்கிணக்க கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சீராக்கம் செய்யப்பட்ட பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | பிரேசில் ரீல் |
|---|---|---|
| காசுப்புத்தகத்தின் வழுக்களை கணிப்பிடல் | | 2,297 |
| மேலதிக அகற்றல்கள் | | 2,003 |
| வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு தீர்வையாகாத நவம்பர் மாத பெறுவனவுகள் | | 418 |

**(ஏ) வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்படாமை**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் புத்தகத்தின் பிரகாரம் ஈரான் தூதுவர் அலுவலகத்தில் ஐ.அ டொலர் 1,040 மீதியொன்று நிலவியதுடன், அது தொடர்பான வங்கி கணக்கிணக்கக்கூற்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஈரான் அரசில் நிலவும் சட்டத்தின் பிரகாரம் அந்நாட்டின் வங்கிகளில் ஐ.அ.டொலர்களிலான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதில்லை என அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**(ஐ) செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்**

நிவ்யோர்க் தூதுவர் அலுவலகத்தால் பேணப்பட்டுவரப்படுகின்ற 15 A இலக்க வங்கிக்கணக்கில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 488,439 (ஐ.அ.டொலர் 4,386) மீதியொன்று நிலவியதுடன் அமைச்சினால் அவ் வங்கிக்கணக்கு செயற்படுத்தப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.

**3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையுடையன ஆகும். தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் சிலவற்றின் விபரங்கள் வருமாறு

(அ) முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்ட பணம்

அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் DGSA 7 படிவத்தில் நட்டங்கள் மற்றும் கைவிடல்களின் கீழ் ரூபா 25,836,766 தீர்ப்பனவு செய்யாமல் தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டில் உரோம் தூதரகத்தில் இடம்பெற்றிருந்த முறையற்ற பாவனைக்குட்படுத்தப்பட்ட தொகையான ரூபா 16,141,919 அந்த நட்டங்கள் மற்றும் கைவிடல்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஹோட்டல் கட்டணங்களை செலுத்துதல்

---

அமைச்சின் 27 உத்தியோகத்தர்கள் 2012 யூலை 10 ஆந் திகதி பாசிக்குடாவில் இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்கேற்று, பாசிக்குடாவில் அமைந்துள்ள உணவகமொன்றில் அத்தினம் காலைச் உணவை பெற்றிருந்தனர் அதற்காக 2012 யூலை 10 ஆந் திகதி ரூபா 18,000 விலைப்பட்டியலொன்றும், அதற்காகவே 2013 செம்தெம்பர் 27 ஆந் திகதி ரூபா 27,000 விலைப்பட்டியலொன்றும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஒரே விடயத்திற்காக இரு விலைப்பட்டியல்கள் முன்வைக்கப்பட்டிருந்தமையும், அமைச்சினால் அவற்றில் கூடியபெறுமதியுடைய விலைப்பட்டியல் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலதாமதத்தின் பின்னர் 2014 சனவரி 13 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தமையும் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(இ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சி கூடங்களுக்கான கொடுப்பனவு

---

தேசத்திற்கு மகுடம் கண்காட்சி கூடம் தொடர்பான செலவினங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கண்காட்சி கூடங்களில் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக கேள்வி மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன், கேள்விதாரர்களால் முன்வைக்கப்பட்ட விலைமனுக்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட கோவையில் காணப்படவில்லை. இதனால், கேள்விதாரர்கள் முன்வைத்த விலைமனுக்களை ஒப்பீடு செய்யும் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ii) தரை கம்பளங்களுக்கான (Carpets) முதலாவது கொடுப்பனவினுள் ரூபா 846,000 விலை உள்ளடக்கப்பட்டு செயற்திட்ட ஆலோசகர் அங்கீகரித்துள்ள போது, இறுதி விலைப்பட்டியலில் அதன் விலை ரூபா 1,307,957 என ரூபா 461,957 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(iii) ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 39:2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியிலான வேறுபாடு ஒரு மில்லியனை விஞ்சக் கூடாதென குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், வேலை முடிவில் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது ரூபா 2,108,822 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த தொகையிலான முரண்களின் பகுப்பாய்விற்காக கூட்டப்பட்ட தொழில்நுட்ப பகுப்பாய்வு குழு அறிக்கை மூலம் ஒப்பந்த தொகையிலான அதிகரிப்பினை நியாயப்படுத்தி கூட்டப்பட்ட தொகையுடன் எஞ்சிய மீதியினை

செலுத்த பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பரிந்துரைக்காக குழுவின் மூன்று அங்கத்தவர்களும் கையொப்பமிட்டிருக்காததுடன், ஒருவர் மாத்திரம் கையொப்பமிட்டிருந்தார். இந்த பரிந்துரையின் செல்லுபடிதன்மை தொடர்பாக கணக்காய்வினால் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. மேலும் அரசினால் இரு தினங்கள் கண்காட்சி காலத்தினை நீடிப்பு செய்தமையால் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களுக்காகவும் மேலதிக விடயங்களுக்கெனவும் என குறிப்பிட்டு ரூபா 2,108,822 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(அ) இந்த அமைச்சு கொள்வனவு நடைமுறைக்கு புறம்பாக 2014 செம்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 08 வாடகை வாகனங்களைப் பெற்றுக்கொண்டிருந்ததுடன், சில வாகனங்கள் அமைச்சில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்குரியவை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 5.4.4(1) ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணச் செலுத்துதலுக்கான பிணைமுறியினை சமர்பித்தலின் அடிப்படையில் மாத்திரம் ஒப்பந்த பெறுமதியின் 20 சதவீத உச்ச முற்பணத் தொகை செலுத்த முடியுமெனினும், அமைச்சினால் கொடிகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்த பெறுமதியில் 50 சதவீதமான அதாவது ரூபா 826,250 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த கொடிகள் அமைச்சின் களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெற்று அதன் மூலம் விநியோகிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமையால் உண்மையாக கொள்வனவு செய்த கொடிகளின் அளவு அமைச்சிற்கு கிடைத்ததா என்பதை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**3.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

(அ) தொழில்நுட்ப மதியுரை சேவையினை பெற்றுக்கொள்ளல்

---

2009 சனவரி மாதத்திலிருந்து 2015 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அமைச்சின் 98 வாகனங்களின் பழுதுபார்த்தமுக்காக தொழில்நுட்ப மதியுரை சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்காக அரச கூட்டுத்தாபனமொன்றின் போக்குவரத்து உத்தியோகத்தரின் சேவையினைப் பெற்றுக்கொண்டமைக்காக 2009 சனவரி மாதம் முதல் 2013 திசெம்பர் மாதம் வரை மாதாந்தம் ரூபா 5,000 வீதம் ரூபா 290,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2014 சனவரி முதல் 2015 ஆகஸ்ட் மாதம் வரை அந்த சேவை கல்வி அமைச்சின் பணிப் பொறுப்பானவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு அதி சொகுசு பேரூந்துகளின் கொள்வனவு

---

கைக்காசு விற்பனை விலை ரூபா 35,900,000 கொண்ட இரு பேரூந்துகள் குத்தகை அடிப்படையில் ரூபா 55,005,120 இற்கு 2013 நவம்பர் 01 ஆந் திகதி முதல் ரூபா 916,752 மாதாந்த தவணைப்படி 60 தவணைகளில் செலுத்தும் உடன்பாட்டின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கைக்காசு விற்பனை விலையினை விஞ்சி ரூபா 19,105,120 தொகையினை அமைச்சிற்கு செலுத்த நேர்ந்திருந்தது. 2015 ஆகஸ்ட் மாதம் வரையில் இரு பேரூந்துகளிலும் எதுவித பாவனையும் பெறப்படாது பாதுகாப்பின்றி அமைச்சின் வளாகத்தில் செயற்பாடற்று காணப்பட்டது.

(இ) வெளிநாட்டு சேவையினை பூர்த்தி செய்து நாடு திரும்பும் உத்தியோகத்தர்களின் பயணப்பொதிகளை துறைமுகத்திலிருந்து விடுவித்தல்

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிநாட்டு சேவையினை முடிவு செய்து நாடு திரும்பும் உத்தியோகத்தர்களின் 2014 ஆம் ஆண்டிற்கான பயணப்பொதிகளை விடுவிக்கும் மொத்த கொடுப்பனவு ரூபா 12,784,674 ஆக இருந்ததுடன், அவற்றுள் 29 சதவீதமான அதாவது ரூபா 3,735,164 தொகையான தாமதக்கட்டணமொன்றினை செலுத்த நேர்த்திருந்தது. மேலும் இந்த ஒட்டு மொத்த மிகை அறவீட்டுப் பெறுமதி கொள்கலன் மேவுகை செய்யும் உள்நாட்டு அரச நிறுவனமொன்றிற்கு ரூபா 1,660,520 தொகையும், இரு வெளிநாட்டு கம்பனிகளுக்கு ரூபா 1,839,093

தொகையும், கொள்கலன் சேவை வழங்கும் தனியார் நிறுவனங்களுக்கு ரூபா 235,551 எனுமாறு செலுத்தப்பட்டிருந்தது.

(ii) விடுவிக்கப்பட்ட பயணப்பொதிக்கான கொடுப்பனவு மேற்கொள்ளும் போது குறித்த செலவினங்கள் உண்மையாக அந்தந்த பயணப்பொதிகளுக்கு உரியவையா என உறுதிப்படுத்திக்கொள்வதற்கான நடைமுறையொன்று அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) குறித்த செலவினங்கள் உண்மையாக ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் எழுந்தனவா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக மூலாதாரமான எதுவும் கொடுப்பனவு உறுதிச்சீட்டொன்றில் கப்பல் பொறுப்பேற்றல் பத்திரம் அல்லது மீளளிப்பு செய்யப்பட்ட ரூபா 137,182 தொகையான கொடுப்பனவுகளுக்குரிய உறுதிச்சீட்டு அல்லது விலைப்பட்டியல் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) விலைப்பட்டியல் இன்மையால் ரூபா 104,876 பெறுமதியான பட்டியல் உண்மையாக அமைச்சிற்குரிய விலைப்பட்டியலா என்பதும் அல்லது செலுத்தப்பட்ட தொகை சரியானதா என்பதனையும் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(v) உத்தியோகத்தர்கள் பயணப் பொதிகளை கொண்டு வரும் போது, அதற்காக வாடகைக்கமர்த்தும் கொள்கலனுக்காக மேற்கொண்டுள்ள வைப்புக்கள் மீள எடுத்தல் அல்லது பதிவழித்தல் உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது அந்த தொகை கழிக்கப்பட வேண்டுமெனினும், 07 கொள்கலன்களுக்கான ரூபா 49,000 வைப்புக்கள் அவ்வாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) பயணப் பொதிகளை விடுவிக்கும் போது மீளளிப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 335,015 கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் இல்லாதிருந்தமையால் பரிசீலிக்க முடியாது போயிருந்தது.

**3.14 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாமை**

---

அமைச்சின் தொழில்நுட்ப ஆலோசனை சேவை உள்ளடங்கலாக போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்காக 03 பகிரங்க பத்திரிகை

விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருந்ததெனினும், 2015 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரையிலும் அப் பதவிக்கு உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்க்க முடியாதிருந்தது. 2013 யூலை 25 ஆந் திகதி மற்றும் 2014 சனவரி 16 ஆந் திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கலந்துரையாடலின் போது இப் பதவிக்கான ஆட் சேர்த்தல் தொடர்பில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்ததுடன், பணிப்பாளர்களினால் (நிர்வாகம்) உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டிருந்ததெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

### 3.15 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட பற்றாக்குறை தொடர்பில் அமைச்சினால் தீர்வு காணப்படாத பந்திகளுடனான தொடர்பு பின்வருமாறு

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2013 | 1.9 | 08 வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான தகவல்கள் கணக்கில் வெளிப்படுத்தப்படாமை மற்றும் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| 2013 | 1.10 | வெளிநாட்டு தூதரகங்களில் சேவை முடித்து நாடு திரும்பும் உத்தியோகத்தர்களின் பயணப் பொதிகளை துறைமுகத்திலிருந்து விடுவிக்கும் போது தண்டப்பணம் செலுத்துவதற்குரிய சுற்றறிக்கை வெளியிடாமை. |
| 2013 | 1.11 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்களின் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக வீடமைப்பு அதிகார சபையிடமிருந்து 2006 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 70 மில்லியன் செலுத்தி கொள்வனவு செய்திருந்த 20 விடுதிகளின் உரித்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான காணியின் உரித்துறுதி வீடமைப்பு அதிகாரசபையிடமிருந்து |

பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.16 மனிதவள முகமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட நிலை | 406 | 354 | 52 |
| (ii) மூன்றாம் நிலை | 148 | 123 | 25 |
| (iii) இண்டாம் நிலை | 918 | 839 | 79 |
| (iv) ஆரம்ப நிலை | 1,301 | 1,197 | 104 |
| (v) ஏனைய (அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படை) | 15 | 12 | 03 |
| மொத்தம் | 2,788 | 2,525 | 263 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 263 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### (ஆ) வருடாந்த இடமாற்றல் பரிசோதனை

2014 யூன் 26 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்றறிக்கையின் 5.2 (இ) பந்தியின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந்

திகதியில் உள்ளவாறு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சேவையாற்றிய ஊழியர்களின் பெயர் பட்டியலொன்று இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன், அதன் 8.2 ஆம் பந்திக்கு முரணாக அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணைந்த சேவைகளில் 05 வருடங்களை விஞ்சிய உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியலுக்கு 06 – 19 வருடங்கள் வரை சேவையாற்றிய 36 உத்தியோகத்தர்களின் விபரம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளம்**

அமைச்சரின் பதவியணியில் வெற்றிடங்கள் காணப்படாத போதிலும், 2011 சனவரி 18 ஆந் திகதியிலிருந்து 2014 மார்ச் மாதம் வரையிலும் அமைச்சரின் ஊடக பணிகளுக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பொது உதவியாளர் பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தரொருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 1,107,021 வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.